# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8069840

1. District : DVAC
மாவட்டம்
PS: DVAC - HQRS
காவல்நிலையம்
Year: 2020
ஆண்டு
FIR No.: 11
மு.த.அ. எண்
Date: 19/10/2020
நாள்

2. (i) Act சட்டம்: The prevention of — Sections பிரிவுகள்: 7, 7A
(ii) Act சட்டம்: Corruption [Amendment] — Sections பிரிவுகள்: 12
(iii) Act சட்டம்: Act - 2018 — Sections பிரிவுகள்: —
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 16-10 2020
Date to : நாள் வரை 16-10-2020
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் 17 30 hrs
Time to : நேரம் வரை 23.45 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16 10 2020
Time : நேரம் 14.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 16 10 2020
Time : நேரம் 15.00 hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: West - 16 KM
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி Office of the Sub-Registrar. Kundrathur NSG Enclave. Kundrathur Salai Sambandam Nagar Manikam Salai Kundrathur
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம் 600069

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் N RAVIKUMAR
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் R Nagarajan
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் Inspector of police
(g) Address : முகவரி DVAC. No 293, M.K.N Road. Alandur - Chennai - 16

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. Tr. T. Saravanan - Head clerk Sub Registrar office Kundrathur
2. Tmt T. Samundeeswari - Office Assistant o/o — do -
3. Tmt. M Anuradha - TCS outsourcing staff o/o Sub Registrar Kundrathur
4. Tr. R Karthik — do -

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— No- Delay -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Unaccounted cash Rs. 24,970/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

FIR Content Enclosed in Separate sheet.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed N. RAVIKUMAR Rank Inspector ... to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு …………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

(signature) 19-10-2020
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Despatch on 19.10.2020

Name: பெயர் N RAVIKUMAR
Rank: நிலை ......... No. எண்

INSPECTOR OF POLICE,
Special Investigation Cell,
Vigilance & Anti Corruption,
Chennai - 600 016.

<u>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.11/2020 சட்டப்பிரிவு 7,7-A மற்றும் 12 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12யின் தொடர்ச்சி பின்வருமாறு</u>

நான் 16.10.2020 அன்று பிற்பகல் சுமார் 14.00 மணியளவில் எனது அலுவலகத்தில் பணியில் இருந்த போது சென்னை குன்றத்தூரில் உள்ள சார்-பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றும் சார்-பதிவாளர், திரு.என்.நவீன், மற்றும் இணை சார்-பதிவாளர், திரு.வி.எஸ்.முருகன், மற்றும் இதர அலுவலர்கள் அந்த அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் அவர்களுக்கு உரிய அரசுப்பணியை செய்து தர கையூட்டு பெறுவதாக நம்பகமான தகவல் கிடைத்தது. எனது அலுவலகத்திற்கு கிடைத்த அந்த தகவலை அன்று (16.10.2020ந் தேதி) சுமார் பிற்பகல் 15.00 மணியளவில் அலுவலக பொதுநாட்குறிப்பில் பதிவு செய்தேன். இந்த தகவலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்து பின் அவர்கள் அனுமதி அளித்ததின் பேரில், திடீர் சோதனை அரசு சாட்சியின் முன்னிலையில் மேற்படி சென்னை குன்றத்தூரில் உள்ள சார்-பதிவாளர் அலுவலகத்தில் 16.10.2020ந் தேதி மதியம் சுமார் 17.30 மணி முதல் இரவு 23.45 மணி வரை நடைபெற்றது. மேலும் இது தொடர்பாக சோதனை ஜாபிதா தயார் செய்யப்பட்டது. சோதனை ஜாபிதாவின் அசலை இத்துடன் இணைத்துள்ளேன்.

பின்னர் எனது அலுவலகம் வந்து மேற்படி திடீர் சோதனை நடைபெற்றது தொடர்பான தகவலை உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்து உரிய அனுமதி பெற்றேன். பின்னர் சோதனை ஜாபிதாவில் குறிப்பிட்டுள்ள குற்றங்களுக்காக எதிரிகள் திரு.டி.சரவணன், தலைமை எழுத்தர், திருமதி.டி.சாமூண்டீஸ்வரி, அலுவலக உதவியாளர், டி.சி.எஸ் நிறுவனம் சார்பாக பணி செய்துவரும் திருமதி.எம்.அமுதா, மற்றும் திரு.ஆர்.கார்த்திக், ஆகியோர்கள் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.11/2020 சட்டப்பிரிவு 7, 7-A மற்றும் 12 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018-யின் படி இன்று (19.10.2020) தேதி மதியம் 12.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். அசல் முதல் தகவல் அறிக்கை, முதன்மை குற்றவியல் நீதிமன்ற நடுவர் மற்றும் தனி நீதிபதி, செங்கல்பட்டு அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

<u>இணைப்பு :-</u> சோதனை ஜாபிதா 16.10.2020 (அசல்) - பக்கங்கள் 1 முதல் 10 வரை)

19-10-2020

INSPECTOR OF POLICE,
Special Investigation Cell,
Vigilance & Anti Corruption,
Chennai - 600 016.

# <u>சோதனை ஜாபிதா</u>

| | | |
|---|---|---|
| சோதனை நடைபெறும் அலுவலகம் | | குன்றத்தூர் சார்-பதிவாளர் அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம். |
| சோதனை நடைபெறும்போது உடனிருந்த சாட்சிகள் | | (1) திரு.கே.ஆர்.ஸ்ரீனிவாசன், ஆண் வயது 48 த/பெ.கே.ரங்கன், கண்காணிப்பாளர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, (பயிற்சிப்பிரிவு) கிண்டி, சென்னை-600 032. 9962236665. |
| சோதனை மேற்கொள்ளும் காவல் அலுவலர் | | திரு.என்.ரவிகுமார், காவல் ஆய்வாளர், சிறப்பு புலனாய்வுத்துறை, ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை ஆலந்தூர், சென்னை-16. |

சென்னை-69, சம்பந்தம் நகர், NSG Enclave, மாணிக்கம் சாலை, குன்றத்தூர், சார்பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் ஆவணங்கள் பதிவு செய்வதற்கும் மற்றும் வில்லங்க சான்றிதழ்கள் பெறுவதற்கும் அந்த அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் அவர்களுக்கு உரிய அரசுப்பணியை செய்து தர கையூட்டு பெறுவதாக நம்பகமான தகவல் எனது அலுவலகத்திற்கு கிடைத்தது. மேற்படி தகவலை இன்றைய தேதியில் (16.10.2020) மாலை சுமார் 3 மணியளவில் அலுவலக பொதுநாட்குறிப்பில் பதிவு செய்யப்பட்டது. இந்த தகவலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை உயர் அதிகாரிகளுக்கு எனது காவல் கண்காணிப்பாளர் அவர்கள்

J. [illegible] 16/10/2020 T. Saravanan 16/10/2020 M. Anuradha 16/10/2020 R. Keerthana 16/10/2020

T. Samundeswari 16/10/2020 [signature] 16/10/2020

வழியாக தகவல் தெரிவித்து பின் அவர்கள் அனுமதி அளித்ததன் பேரில் திடீர் சோதனை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

மேலும் திடீர் சோதனைக்கு சாட்சியை அனுப்பி வைக்க வேண்டி கூடுதல் இயக்குநர், (கைவினைஞர் பயிற்சி) வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, கிண்டி, சென்னை-32 என்பவரிடம் தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்தன் பேரில் மேற்கண்ட சாட்சி இன்று 16.10.2020ந் தேதி மாலை சுமார் 5.00 மணியளவில் குன்றத்தூர் பேருந்து நிலையம் அருகே வந்திருந்தார். அங்கு காத்திருந்த நான் மேற்சொன்ன சாட்சியை அடையாளம் கண்டுகொண்டு அவர்களிடம் என்னையும் குழுவினரையும் அறிமுகம் செய்து தகவலை தெரிவித்து மேற்படி குன்றத்தூரில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் சோதனை செய்ய உள்ள விவரத்தை தெரிவித்தேன். மேற்படி சாட்சியும் சோதனையின் போது சாட்சியாக இருக்க ஒப்புக்கொண்டார்.

சோதனை நடைபெறவுள்ள குன்றத்தூர் சார் பதிவாளர் அலுவலகம் NSG Enclave, மாணிக்கம் சாலை, சம்பந்தம் நகர், சென்னை-600 069 என்ற முகவரியில் கிழக்கு மேற்காக செல்லும் மாணிக்கம் சாலையின் தெற்கு பக்கம் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. இன்று 16.10.2020ந்தேதி மாலை சுமார் 5.30 மணியளவில் குன்றத்தூர் சார்-பதிவாளர் அலுவலகத்தில் சோதனை தொடங்கப்பட்டது.

16/10/2020 T. Saravanan 16/10/2020 M. Anandha 16/10/2020 R. Kaythreb 16/10/2020

T. Samundeswari 16/10/2020 16/10/2020

திடீர் சோதனையின் போது சாட்சி திரு.கே.ஆர்.ஸ்ரீனிவாசன் அவர்களையும், தன்னையும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அலுவலர்களையும் சார் பதிவாளர் அலுவலகத்தின் பணிபுரியும் அலுவலர்களிடம் அறிமுகம் செய்து கொண்டார்.

மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனையின் போது (1) திரு.டி.சரவணன், தலைமை எழுத்தர் (2) திரு.டி.யுவராஜ், உதவியாளர் (3) திருமதி.கோ.ஜனதா, இளநிலை உதவியாளர் (4) திரு.ரவிசங்கர், இளநிலை உதவியாளர், (5) திருமதி.சாமூண்டிஸ்வரி அலுவலக உதவியாளர் மற்றும் திருமதி.அமுதா, திருமதி.ஜெய சத்திய ஸ்ரீ மற்றும் திருமதி.வா.மலர்கொடி திரு.கார்த்திக் (டி.சி.எஸ் நிறுவனம் சார்பாக பணி செய்பவர்கள்) ஆகியோர் பணியில் இருந்தனர். மேற்படி அலுவலகத்தில் உள்ளே நுழைந்ததும் பார்வையாளர்களுக்கான இருக்கைகள் கொண்ட அறையும், அதனை தொடர்ந்து மேற்கு பக்கம் உள்ளே நுழைந்ததும் ஒரு பெரிய பிரதான அறை காணப்படுகிறது. அந்த அறையின் மேற்கு பக்கத்தில் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்த போது தனது பெயர் டி.சரவணன் என்றும் இவ்வலுவலகத்தில் தலைமை எழுத்தராக பணிபுரிவதாக தெரிவித்தார். மேலும் திரு.டிசரவணன் வைத்திருந்த பணம் குறித்து கேட்க தனது பேண்ட் வலது பக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.3600/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி. பணம் ரூ.3600/- குறித்து அவரிடம் கேட்டதற்கு அதில் தனது சொந்தப் பணம் ரூ.360/- என்றும், மீதிப்பணம் ரூ.3240/- ஆவணங்களை பதிவு செய்ய வந்த நபர்களில்

T. Saravanan 16/10/2020 M. Amudha 16/10/2020 R. Karthick 16/10/2020

T. Samundeswari 16/10/2020 16/10/2020

இலஞ்சமாக பெற்றதாக தெரிவித்தார். அவர் தனது சொந்த பணம் குறித்து விவரம் தெரிவித்ததை இன்றைய தேதியில் மேற்படி பண இருப்பு பதிவேட்டில் சரிபார்த்து அவரின் விளக்கத்தை ஏற்றுக் கொண்டு ரூ.360/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. மேலும் இன்றைய தேதியில் ஆவணங்களை பதிவு செய்ய வந்த நபர்களிடம் திரு.டி.சரவணன் லஞ்சமாக பெற்ற பணம் ரூ.3240/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1. | 500 x 6 | 3000.00 |
| 2. | 100 x 2 | 200.00 |
| 3. | 20 x 1 | 20.00 |
| 4. | 10 x 2 | 20.00 |
| | Total | 3,240.00 |

அதனை தொடர்ந்து அவரது இருக்கைக்கு அருகே இடது புறத்தில் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் திருமதி.ஜெய சத்ய ஸ்ரீ என்றும், இவ்வலுவலகத்தில் டி.சி.எஸ் நிறுவனம் மூலம் தகவல் தொகுப்பு பணியாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். மேலும் அதனை தொடர்ந்து கிழக்கு நோக்கி அமர்ந்திருந்த மற்றொரு நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் திருமதி.கோ.ஜனதா என்றும் இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிவதாக தெரிவித்தார்.

T. Saravanan 16/10/2020

T. Samundeswari 16/10/2020

மேலும் இந்த அறையை தொடர்ந்து கண்ணாடி மற்றும் அலுமினியம் கொண்ட தனி அறை தெற்கு பக்க நுழைவாயிலுடன் காணப்படுகிறது. அந்த அறையின் உள்ளே நுழைந்ததும், கிழக்கு நோக்கி இணை சார் பதிவாளர் இருக்கையும், மற்றும் சார் பதிவாளர் இருக்கையும் காணப்படுகிறது. இந்த திடீர் சோதனையின் போது இவ்வலுவலகத்தின் இணை சார்-பதிவாளர் திரு.வி.எஸ்.முருகன் மற்றும் சார்-பதிவாளர் திரு.என்.நவீன் ஆகியோர் பணியில் இல்லை. இது தொடர்பாக தலைமை எழுத்தர் திரு.டி.சரவணன் அவர்களிடம் விசாரித்த போது இன்று 16.10.2020ந்தேதி மதியம் 3.30 மணிக்கு இணை சார்-பதிவாளர் திரு.வி.எஸ்.முருகன் மற்றும் சார்-பதிவாளர் திரு.என்.நவீன் ஆகியோர் இவ்வலுவலகத்திலிருந்து சென்று விட்டதாக தெரிவித்தார். அந்த அறையில் இணை சார்பதிவாளர் மற்றும் சார்பதிவாளர் இருக்கைகளுக்கு எதிர்ப்புறத்தில் வடக்கு நோக்கி இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரித்த போது தனது பெயர் டி.யுவராஜ் என்றும் இவ்வலுவலகத்தில் திருமண பதிவு, இவ்வலுவலக சம்பள பில் மற்றும் நீதிமன்ற பணிகளை கவனித்து வருவதாக தெரிவித்தார். மேலும் திரு.டியுவராஜ் வைத்திருந்த பணம் குறித்து கேட்க தனது பேண்ட் வலது பக்க பாக்கெட்டின் பர்சிலிருந்து பணம் ரூ.300/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் ரூ.300/- குறித்து அவரிடம் கேட்டதற்கு, தனது சொந்தப் பணம் ரூ.300/- என்று தெரிவித்தார். அவர் தனது சொந்த பணம் குறித்து விவரம் தெரிவித்ததை இன்றைய தேதியில் மேற்படி பண இருப்பு பதிவேட்டில் சரிபார்த்து அவரின் விளக்கத்தை ஏற்றுக் கொண்டு ரூ.300/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

T. Saravanan 16/10/2020 M. Amutha 16/10/2020 R. Kaythika 16/10/2020

T. Samundeswari 16/10/2020 16/10/2020

மேலும் அவருக்கு அடுத்து வலதுபுறத்தில் இருக்கையில் அமர்ந்திருந்த மற்றொரு நபரை விசாரித்தபோது தனது பெயர் எம்.அமுதா என்றும் இவ்வலுவலகத்தில் டி.சி.எஸ் நிறுவனம் மூலம் ஆவணங்களை பதிவு செய்வதற்கு "A" ரசீது கொடுக்கும்பணியை செய்து வருவதாக தெரிவித்தார். மேலும் திருமதி.எம்.அமுதா வைத்திருந்த பணம் குறித்து கேட்க தனது பிரவுன் நிற கைப்பையிலிருந்து பணம் ரூ.2900/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் ரூ.2900/- குறித்து அவரிடம் கேட்டதற்கு பதில் கூறாமல் மௌனமாக இருந்தார். இந்த பணம் லஞ்சமாக பெற்றிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1. | 200 x 6 | 1,200.00 |
| 2. | 100 x 17 | 1,700.00 |
| | Total | 2,900.00 |

மேலும் பிரதான அறையின் மேற்கு பக்கத்தில் கிழக்கு நோக்கி நிரந்தர பதிவு ஆவணங்கள் வைப்பு அறை காணப்படுகிறது. அந்த அறையில் பழைய ஆவணங்களை ஸ்கேனிங் செய்யும் பணியை ஆர்.ஜோதிலட்சுமி, பி.எவன்ஜிலின் குளோரி மற்றும் எல்.சரண்யா ஆகியோர் 9 Star Private Limited என்ற பிரைவேட் கம்பெனி மூலம் செய்து வருவதாக இவ்வலுவலக தலைமை எழுத்தர் திரு.டி.சரவணன் தெரிவித்தார். பிரதான அறையின் வடக்கு பக்கத்தில் தெற்கு நோக்கி கணிணி அறை காணப்படுகிறது. அந்த அறையில் கணிணி பணியில் இருந்த தெற்கு நோக்கி

[illegible] 16/10/2020 T. Saravanan 16/10/2020 M. Amudha 16/10/2020 R. Keerthika 16/10/2020

T. Samundeswari 16/10/2020 [illegible] 16/10/2020

அமர்ந்திருந்த நபரை விசாரித்த போது தனது பெயர் ஆர்.கார்த்திக் என்றும் கணினி தொகுப்பாளராக டி.சி.எஸ் நிறுவனம் மூலம் இவ்வலுவலகத்தில் பணியாற்றி வருவதாகவும், இவ்வலுவலகத்தில் பதிவு செய்த ஆவணங்களுக்கு குறுந்தகடு வழங்கும் பணியை செய்து வருவதாக தெரிவித்தார். திரு.ஆர்.கார்த்திக் வைத்திருந்த பணம் குறித்து கேட்க தனது பேண்ட் வலது பக்க பாக்கெட்டின் பர்சிலிருந்து பணம் எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணி பார்த்தபோது ரூ.15,930/- காணப்பட்டது. மேற்படி பணம் ரூ.15,930/- குறித்து அவரிடம் கேட்டதற்கு பதில் கூறாமல் மௌனமாக இருந்தார். இந்த பணம் லஞ்சமாக பெற்றிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1. | 500 x 28 | 14,000.00 |
| 2. | 200 x 4 | 800.00 |
| 3. | 100 x 11 | 1,100.00 |
| 4. | 10 x 3 | 30.00 |
| | Total | 15,930.00 |

அதனை தொடர்ந்து மேற்படி திரு.ஆர்.கார்த்திக் இடதுபுறத்தில் தெற்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது தனது பெயர் வா.மலர்கொடி. என்றும் டி.சி.எஸ் நிறுவனம் மூலம் இவ்வலுவலகத்தில் ஆவணங்களை ஸ்கேனிங் செய்யும் பணியை

T. Saravanan 16/10/2020 M. Anudha 16/10/2020 R. Karthica 16/10/2020

T. Samundeswari 16/10/2020

16/10/2020

செய்து வருவதாக தெரிவித்தார். மேலும் அந்த அறையில் 2 HP Multi purpose Xerox machine காணப்பட்டது.

மேலும் பிரதான அறையின் கிழக்கு பக்கத்தில் மேற்கு நோக்கி நுழைவுவாயிலுக்கு அருகே வடக்கு பக்கத்தில் தெற்கு நோக்கி வில்லங்க சான்று வழங்கும் அறை உள்ளது. இந்த அறையை தொடர்ந்து, தெற்கு நோக்கி ஸ்டோர்ஸ் அறை உள்ளது. மேலும் அதனை தொடர்ந்து, காணப்பட்ட பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் வழங்கும் அறையில் வடக்கு நோக்கி இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் ரவிசங்கர் என்றும், இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். மேலும் திரு.ரவிசங்கர் வைத்திருந்த பணம் குறித்து கேட்க தனது பேண்ட் இடது பக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.450/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் ரூ.450/- குறித்து அவரிடம் கேட்டதற்கு, அவர் தான் இன்று பணம் ரூ.650/- எடுத்து வந்ததாகவும் அதில் பணம் ரூ.200/- செலவு செய்தது போக மீதிப்பணம் ரூ.450/- வைத்திருந்ததாக தெரிவித்தார். அவர் தனது சொந்த பணம் குறித்து விவரம் தெரிவித்ததை இன்றைய தேதியில் மேற்படி பண இருப்பு பதிவேட்டில் சரிபார்த்து அவரின் விளக்கத்தை ஏற்றுக் கொண்டு ரூ.450/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. பின்னர் வரவேற்பு அறையின் மேற்கு பக்கத்தில் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் சாமூண்டிஸ்வரி என்றும் இவ்வலுவகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். திருமதி சாமூண்டிஸ்வரி அவர்களிடம் உள்ள பணம் குறித்து கேட்க அவர் தனது கைப்பையில் இருந்து பணம் எடுத்து ஆஜர் செய்ததை எண்ணி பார்த்தபோது பணம் ரூ.3400/- காணப்பட்டது. அவரிடம் மேற்படி பணம் ரூ.3400/-

[signature] 16/10/2020 T. Saravanan 16/10/2020 M. Anuradha 16/10/2020 R. Kavitha 16/10/2020

T. Samundeswari 16/10/2020 [signature] 16/10/2020

குறித்து கேட்ட போது, அதில் தனது சொந்தப் பணம் ரூ.500/- என்றும், மீதிப்பணம் ரூ.2900/- ஆவணங்களை பதிவு செய்ய வந்த நபர்களிடம் இலஞ்சமாக பெற்றதாக தெரிவித்தார். அவர் தனது சொந்த பணம் குறித்து விவரம் தெரிவித்ததை இன்றைய தேதியில் மேற்படி பண இருப்பு பதிவேட்டில் சரிபார்த்து அவரின் விளக்கத்தை ஏற்று கொண்டு ரூ.500/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. மேலும் இன்று ஆவணங்களை பதிவு செய்ய வந்த நபர்களிடம் திருமதி.சாமூண்டிஸ்வரி லஞ்சமாக பெற்ற பணம் ரூ.2900/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1. | 500 x 1 | 500.00 |
| 2. | 200 x 6 | 1.200.00 |
| 3. | 100 x 11 | 1,100.00 |
| 4. | 50 x 2 | 100.00 |
| | Total | 2,900.00 |

மேலும் இன்றைய தேதியில் 87 ஆவணங்கள் இவ்வலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதாகவும், அதில் 45 கிரைய ஆவணங்களாகவும், 20 உரிமை ஒப்படைப்பு ஆவணங்களாகவும், 8 தான செட்டில்மெண்ட் ஆவணங்களாகவும், 6 கட்டுமான உடன்படிக்கை ஆவணங்களாகவும், 4 பொது அதிகார ஆவணமாகவும், 1 உயில் ஆவணமாகவும், 1 அறக்கட்டளை சார்பாக பதிவு செய்யப்பட்ட ஆவணமாகவும்

16/10/2020 T. Saravanan 16/10/2020 N. Amutha 16/10/2020 R. Kasthuri 16/10/2020

T. Samundeswari 16/10/2020 16/10/2020

மற்றும் 1 ரசீது ஆவணமாகவும், 1 கிரைய ஒப்பந்த ஆவணமாகவும் இன்றைய தேதியில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் தொடர்பாக இணைய வழி கட்டணம் பெறப்பட்டுள்ளதாகவும் இவ்வலுலகத்தின் தலைமை எழுத்தர் திரு.டி.சரவணன் தெரிவித்தார். குன்றத்துார் சார்பதிவாளர் அலுவலகத்தில் இன்றைய தேதியில் திடீர் சோதனையின்போது கணக்கில் வராத மொத்த பணம் ரூ.24,970/- மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி. இணை சார் பதிவாளர் திரு.வி.எஸ்.முருகன் மற்றும் சார் பதிவாளர் திரு.என்.நவீன் ஆகியோர் இவ்வலுவலக மூவ்மெண்ட் பதிவேட்டில் எந்த ஒரு பதிவும் குறிப்பிடாமல் அலுவலகத்தை விட்டு சென்றுள்ளது அந்த மூவ்மெண்ட் பதிவேட்டை ஆய்வு செய்ததில் தெரியவருகிறது. இந்த மூவ்மெண்ட் பதிவேடு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த சோதனையின் போது அலுவலக பணிகளுக்கோ, அரசு உடைமைகளுக்கோ, பொது மக்களுக்கோ இடையூறு ஏற்படாத வண்ணம் நடத்தி முடிக்கப்பட்டது. சோதனையின் போது பெண் காவலர்கள் பணியில் இருந்தனர். குன்றத்துார் சார் பதிவாளர் அலுவலகத்தில் இந்த சோதனை 16.10.2020-ம் தேதி மாலை 5.30 மணிக்கு தொடங்கி இரவு 11.45 மணிக்கு முடிக்கப்பட்டது.

T. Saravanan
16/10/2020

M. Anudha
16/10/2020

[illegible] 16/10/2020

T. Saravanan
Assistant
Sub-Registrar office
Kundrathur.
Chennai - 69

M. Anudha (DEO)
Sub-Registrar off
Kundrathur
Chennai - 69

K. R. [illegible]
[illegible]
[illegible] மற்றும் [illegible]
[illegible], சென்னை - 600032

R. Karthick
16/10/2020
R. KARTHICK [IPCO]
SUB REGISTRAR OFFICE Kundrathur
Kundrathur
Chennai - 69

T. Jamundeswari
16/10/2020
Sub Register Office
Kuntratur
Chennai - 69

16-10-2020
(N. RAVIKUMAR)
INSPECTOR OF POLI
Special Investigation
Vigilance and Anti Cor-
-ruption
Chennai - 16.